**`DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**
**SESSIONS CASE NO. 40 OF 2013**
**Deposition of Witness for : PW-5**

| | |
|---|---|
| Name | : திரு. வீராசாமி |
| Father's Name | : குப்புசாமி |
| Village | : பெரியகல்லபாடி புதூர் |
| Taluk | : திருவண்ணாமலை |
| Caste | : ரெட்டியார் |
| Calling | : கூலி |
| Religion | : இந்து |
| Age | :35 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 26-08-2019 .

முதல் விசாரணை.

நான் தற்போது பெரியகல்லப்பாடி புதூரில் குடியிருந்து வருகிறேன். நான் மேஸ்திரி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். இந்த வழக்கில் இறந்து போன வெங்கடேசன் என்னுடைய உறவினர். எதிரிகள் அடித்ததால் இறந்ததாக சொன்னார்கள். 7 வருடத்திற்கு முன்பாக வெங்கடேசன் வீட்டாண்டை எதிரிகள் வந்து அடித்து அவரை சாகடித்து விட்டதாக கேள்விப்பட்டு நான் மறுநாள் திருவண்ணாமலைஅரசு மருத்துவமனையில் போய் பார்த்தேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை மருத்துவமனையில் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**.

எதிரிகள் வெங்கடேசனை அடித்ததை என் அண்ணன் பழனி என்பவர் சொன்னார். திருவண்ணாமலை ஜி.எச்.சில் வந்து சொன்னார். அவர் காலையில் 11.00 மணி அளவில் என்னிடம் சொன்னார். இறந்து போன வெங்கடேசனுக்கும் , எதிரிகளுக்கும் இருந்த தகராறை பற்றியும் எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரியல்ல. இறந்து போன வெங்கடேசன் எனக்கு உறவினர் என்பதால், போலீசார்

சொல்லிக் கொடுத்து , நான் பொய்யாக சாட்சியம் அறிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்து போன வெங்கடேசன் என் அண்ணனுக்கு சொந்தம். எனக்கும் சொந்தம். போலீசார் சொன்னதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

ஒப்பம்/-வீராசாமி

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/- C. Thirumagal,
Principal Sessions Judge,
Tiruvannamalai.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**
**SESSIONS CASE NO. 40 OF 2013**
**Deposition of Witness for : PW-6**

| | |
|---|---|
| Name | : திரு. சின்னதம்பி |
| Father's Name | : வேடி கவுண்டர் |
| Village | : காட்டாம்பூண்டி |
| Taluk | : தி.மலை |
| Caste | : வன்னியர் |
| Calling | : விவசாயம் |
| Religion | : இந்து |
| Age | : 61 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 26-08-2019 .

முதல் விசாரணை.

நான் தற்போது பெரியகல்லப்பாடியில் வசித்து வருகிறேன். நான் கூட்டுறவு கடையில் விற்பனையாளராக இருந்து பணி ஓய்வு பெற்றுள்ளேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 2012ல் நான் பெரியகல்லப்பாடி கூட்டுறவு கடையில் வேலை செய்து கொண்டிருந்தேன். பகுதி நேர கடை கருவட்டாம்பளையில் வேலை பார்த்து வந்தேன். இந்த வழக்கில் இறந்து போனவரின் பெயர் கருணா என்கிற வெங்கடேசன் தான் இறந்து போனவர். அவர் என்னுடைய கடைக்கு பக்கத்தில் மளிகை கடை வைத்துள்ளார். அவ்வப்போது என் கடைக்கு வந்து எடை போட்டு எனக்கு உதவி செய்வார். அவர் என்னிடம் செல்போன் வாங்கினார். வெளியே போய் பேசி விட்டு வருவதாக சொன்னார். செல்போன் வாங்கி பேசினார் யாரிடம் பேசினார் என்று தெரியாது. வெங்கடேசன் இறந்து விட்டார். அவர் எப்படி இறந்து விட்டார் என்று எனக்கு தெரியாது.

அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி, அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)..

போலீசார் இந்த வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்தார்கள் என்றும், அந்த விசாரணையில் நான் கருவட்டாம்பாளையத்தில் கூட்டுறவு சங்கத்தில் விறப்னையாளராக இருந்த போது வளர்மதியும், வெங்கடேசனும் என் கடைக்கு வருவார் என்றும் வெங்கடேசன் தன் தங்கை என்று கூறியதாகவும், வெங்கடேசன் வள 16.11.2012ம் தேதி 12.00 மணி அளவில் வீரன் வீராசாமி இவர்கள் எல்லோரும் வந்து என் தங்கையை செல்போனை ஏன் கொடுத்தாய் என்று வெங்கடேசனை அடிதது விட்டதாகவும், போலீசார் என்னை கூப்பிட்டு கொண்டு சென்று 1-1/2 மாதம் கழித்து செல்போன் நெம்பரை வாங்கியதாகவும், நான் அதே ஊரில் வேலை செய்து கொண்டிருந்தேன் என்றும், இந்த கொலையை பற்றி போலீசாரிடம் சொல்லி விட்டு ,தற்போது எதிரிகளை காப்பாற்ற வேண்டி உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை. இல்லை.

ஒப்பம்/- சின்னதம்பி

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/- C. Thirumagal,
Principal Sessions Judge,
Tiruvannamalai.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**
**SESSIONS CASE NO. 40 OF 2013**
**Deposition of Witness for : PW-7**

| | |
|---|---|
| Name | : திரு. செல்லவேல் |
| Father's Name | : கோவிந்தசாமி ரெட்டியார் |
| Village | : சு.பாப்பாம்பாடி |
| Taluk | : தி.மலை |
| Caste | : ரெட்டியார் |
| Calling | : விவசாயம் |
| Religion | : இந்து |
| Age | : 44 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 26-08-2019 .

முதல் விசாரணை.

நான் தற்போது பாப்பாம்பாடி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது தனியார் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். அதற்கு முன்பாக விவசாயம் செய்து வந்தேன். என் மனைவி பெயர் லோகேஸ்வரி. எனக்கு 2 பிள்ளைகள் உள்ளார்கள். ஆஜர் எதிரிகளை தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் அ.த.சா-ஆ. 2 ஆகும்.** ஒரு 7 வருடத்திற்கு முன்பாக கல்லப்பாடி போகிற வழியில் வெங்கடேசன் வீட்டாண்டை போலீசார் விசாரித்து கொண்டிருந்தார்கள். இறந்து போன வெங்கடேசனுக்கும், எதிரிகளுக்கும் சண்டை நடந்ததாகவும், போலீசார் அந்த இடத்தை பார்வையிட்டு விசாரணை செய்து படம் வரைந்து கொண்டிருந்தார்கள். அந்த இடத்தை பார்வையிட்டதற்காக நான் கையெழுத்து போட்டேன். என்னுடன் சேகர் என்பவரும் கையெழுத்திட்டார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை. எங்கள் நிலம் கல்லப்பாடியில் உள்ளது. இறந்து போன வெங்கடேசன் என்பவர் வீட்டாண்டை தான் நான் கையெழுத்து போட்டேன். மதியம் நான் கையெழுத்திட்டேன். போலீசார் எழுதி வைத்திருந்த தாளில் தான் கையெழுத்து போட்டேன். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் தெரியும். நான் வெங்கடேசனின் பக்கத்து கிராமம். இறந்து போன வெங்கடேசன் எனக்கு பங்காளி முறை ஆகும். நான் சுமாராக 10 வருட காலமாக திருவண்ணாமலையில் தாமரை நகரில் குடியிருக்கிறேன். நான் தி.மலை அரசு மருத்துவமனையில் போலீசார் கேட்டதால் நான் மருத்துவமனையில் கையெழுத்து செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. இறந்து போன வெங்கடேசன் எனக்கு உறவினார் என்பதால் அவர் வீட்டில் வைத்து கையெழுத்து செய்தேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

ஒப்பம்/-செல்லவேல்

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/- C. Thirumagal,
Principal Sessions Judge,
Tiruvannamalai.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**
**SESSIONS CASE NO. 40 OF 2013**
**Deposition of Witness for : PW-8**

| | |
|---|---|
| Name | : திரு சேகர் |
| Father's Name | : முனுசாமி |
| Village | : கருவேட்டன்பாளையம் |
| Taluk | : தி.மலை |
| Caste | : S.C |
| Calling | :விவசாயம் |
| Religion | : இந்து |
| Age | :44 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 26-08-2019 .

முதல் விசாரணை.

நான் தற்போது கருவட்டாம்பாளையத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் அ.த.சா-ஆ. 3 ஆகும். நான் வெங்கடேசன் இறந்த மறு நாள் நான் மருத்துவமனைக்கு சென்றேன். போலீசார் ஆஸ்பத்திரியில் விசாரித்து தான் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். பார்வை மகஜரில் எனக்கு முன்பாக என்னுடன் கையெழுத்து போட்ட செல்லவேல் என்பவரை எனக்கு தெரியும்.

அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி, அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)..

போலீசார் இந்த வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்தார்கள் என்றும், அந்த விசாரணையில் எதிரிகள் வெங்கடேசனை கொலை செய்த மறு நாள் நான் , செல்லவேல் இறந்து போன வெங்கடேசன் வீட்டில் இருந்த போது போலீசார் அங்கு வந்து பார்வையிட்டார்கள் என்றும், அதற்காக அந்த இடத்தில் தான் போலீசார்

படம் வரைந்து நானும், செல்லவேலும் கையெழுத்து செய்தோம் என்றால் ஆமாம். தற்போது நான் மருத்துவமனையில் கையெழுத்து செய்தததாக மாற்றி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தற்போது எதிரிகளை காப்பாற்ற வேண்டி உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

இல்லை
ஒப்பம்/- சேகர்

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/- C. Thirumagal,
Principal Sessions Judge,
Tiruvannamalai.